# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## சேர்பெறுமதி வரி (திருத்தம்)

**2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால்*
*2014, மாச்சு மாதம் 21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2014, மாச்சு மாதம் 10 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **292 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 13.00** **தபாற் செலவு : ரூபா 7.50**

2-PL 008089-350 (2014/03)

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 3ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை வியாபாரத்தின் பொறுப்பினது தொடக்க அளவை 500 மில்லியன் ரூபாவிலிருந்து 250 மில்லியன் ரூபாவுக்குக் குறைப்பதாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, குறித்தசில நிபந்தனைகளுக்கமைய, மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனைத் தொழிலுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்பை வரையறுப்பதாகும்.

**வாசகம் 4 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவைத் திருத்துவதுடன்,முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 5 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட கருதப்பட்ட பொறுப்பின்மீதான வரிப்பணப்பட்டியல்களை வழங்குவதனைத் தவிர்ப்பதற்கு ஏற்பாடு செய்வதாகும்.

**வாசகம் 6 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, நீண்டகாலக் காப்புறுதித் தொழிலையும் பொதுக் காப்புறுதித் தொழிலையும் கொண்டு நடாத்துகின்ற ஆட்களினால் நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதித் தொழில்கள் தனிவேறாக்கப்படும் விடயத்திலான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதும், ஏதேனும் வங்கியின் அல்லது நிதிக்கம்பெனியின் ஏதேனும் கொள்ளுதல் அல்லது ஒன்றிணைவு இடம் பெறுமிடத்து உட்படுத்தப்படாத உள்ளீட்டு வரவை உரிமைகோருவதற்கு அத்தகைய வங்கியை அல்லது நிதிக்கம்பெனியை அனுமதிப்பதும் ஆகும்.

**வாசகம் 7 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, நிதிச் சேவைகளின் சேர்பெறுமதி வரியைக் கணக்கிடுவதில் அப்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபக் கணக்கிடுகை முறையை மட்டுமே கடைப்பிடிப்பதாகும்.

**வாசகம் 8 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஈ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந் தன்மையினதாகும்.

**வாசகம் 9 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 40ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, தவணைதவறுகை வரிகளின் தற்போதைய முந்துரிமை உரிமைக்கோரிக்கைகளை ஓராண்டிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு விரிவாக்குவதாகும்.

**வாசகம் 10 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 71ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, பண்டங்களின் இறக்குமதி மீது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் சேர்பெறுமதி வரி மீளளிப்பு நிதியத்துக்கான உதவு தொகையை 10 சதவீதத்திலிருந்து 6 சதவீதத்துக்குக் குறைப்பதாகும்.

**வாசகம் 11 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 83ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ''சர்வதேசப் போக்குவரத்து'' என்பதன் வரைவிலக்கணத்தை விரிவாக்குவதாகும்.

***வாசகம் 12 :*** இவ்வாசகம், புதிய விலக்களிப்புக்களைச் சேர்ப்பதற்கும் குறித்தசில இனங்களுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்புக்களை மட்டுப்படுத்துவதற்குமென முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தைத் திருத்துகின்றது.

***வாசகம் 13 :*** இவ்வாசகம், உண்ணாட்டரசிறைச் சேவையின் சேவைக் குறிப்பில் குறித்தசில பதவிப்பெயர்களுக்குச் செய்யப்பட்ட மாற்றங்களுக்கிசைய அத்தகைய பதவிப் பெயர்களுக்கான மாற்றத்தைக் குறிக்கின்றது.

# சேர் பெறுமதி வரி (திருத்தம்)

*ச.வ.ஓ. 04/2014*

## *2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர் பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் ஆம் இலக்க,சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன்,2014 ஆம் ஆண்டு சனவரி 1ஆந் திகதியன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அப்பிரிவை (1)ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(ஆ) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், (ஊ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(ஊ) இப்பிரிவின் முற்போந்த பந்தியின் கீழான வழங்கல்களும் முதலாம் அட்டவணையின் IIஆம் பாகத்தின் கீழ் விலக்களிக்கப்பட்ட எவையேனும் வழங்கல்களும் உட்பட, ஏதேனும் பஞ்சாங்க ஆண்டில் மூன்று மாதங்களைக் கொண்ட ஏதேனும் தொடர்ச்சியான காலப் பகுதிக்கு இருநூற்றியைம்பது மில்லியன் ரூபாவுக்குக் குறையாத மொத்த வழங்கல்களை உடைய எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் பங்காண்மையினால்:";

2-PL 008031 -225 (2014/03)

(இ) அப்பிரிவுக்கான இரண்டாம் காப்புவாசகத்தை நீக்கி விட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"ஆயின், மேலும், (ஊ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆளுக்குக் குறிப்பீடு செய்யப்பட்ட வரிவிதிக்கப்படக் கூடியமை,அதில் குறித்துரைக்கப்படும் நிபந்தனைக ளுக்கு அமைவாக,8 ஆம் பிரிவில் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கு அமைந்ததாதல் வேண்டும்:";

(ஈ) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(2) பந்தி (ஊ) வின் நோக்கங்களுக்காக,"மொத்த வழங்கல்கள்" என்பது, பின்வருவோரின் வழங்கல்க ளின் கூட்டுமொத்தப் பெறுமதி என்று பொருள்படும்:-

(i) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பதிவுகளின் கீழ் ஓரிடத்தில் அல்லது வெவ்வேறு இடங்களில் ஒத்த தன்மையினதான வேறு தொழிலைக் கொண்டு நடாத்துகையில் மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள எவரேனுமாள் அல்லது பங்காண்மை; அத்துடன்

(ii) மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்ப னைத் தொழிலில் ஈடுபட்டுள்ள கம்பெனிகள் தொகுதியின் ஏதேனும் துணைநிலை இணைந்த கம்பெனி தொடர்பாக, மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனைத் தொழிலில் ஈடுபடாத ஏதேனும் கம்பெனி தவிர்ந்த, தொகுதியின் ஒவ்வொரு கம்பெனி.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவு,“அத்தகைய வழங்கல்களும் இறக்குமதிகளும் 7ஆம் பிரிவின் கீழ் சைபர் வீதமிடப்பட்டாலொழிய வரி அறவிடப்படலாகாது.” என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“அத்தகைய வடிவங்களும் இறக்குமதிகளும் 7ஆம் பிரிவின் கீழ் சைபர் வீதமிடப்பட்டாலொழிய வரி அறவிடப் படலாகாது:

ஆயின், இச்சட்டத்தின் 3ஆம் பிரிவின் (ஊ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரின் விடயத்தில் அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆளின் சைபர் வீதமிடப்பட்ட வழங்கல்கள் தவிர, அவரின் மொத்த வழங்கலின் இருபத்தைந்து சதவீதத்துக்கு விஞ்சுதலாகவுள்ள, தொகையை பதிவு செய்யப்பட்ட ஆளினால் நேரடியாக அல்லது வேறெவரேனுமாளின் சார்பில் செய்யப்பட்ட இச்சட்டத்தின்கீழ் விலக்களிக்கப்பட்ட பண்டங்களின் வழங்குதலின் பெறுமதி, அத்துடன் இறக்குமதியாளரினாலேயே வழங்குதல் செய்யப்படுமிடத்து, விசேட வியாபாரப்பண்டங்கள் அறவீட்டுக்கமைய பண்டங்களின் வழங்குதலின் பெறுமதி,அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆளின் வரிக்குட்பட்ட வழங்குதல்களாகக் கொள்ளப்படுதல் வேண்டுமென்றும், வரியுட்பட்ட பிரதி பயனின் மீதமான பின்னத்தைப் பயன்படுத்தி இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் வரிவிதிக்கப்படற்பாலதாகவும் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், மேலும், விடயத்திற்கேற்ப, இக்காப்புவாசகத்தின் பந்தி (அ) அல்லது பந்தி (ஆ) வின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆளொருவரின் வழங்கல்களின் மொத்தப் பெறுமதியின் எழுபத்தைந்து சதவீதத்தை முறையே விஞ்சுகின்ற -

(அ) இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் IIஆம் பாகத்தில் விலக்களிக்கப்பட்டவாறு குறித்துரைக்கப் பட்ட மருந்தாக்கங்களை வழங்குகின்ற; அல்லது

(ஆ) கணனிகளும் கணனித் துணைப்பொருட்களும் உட்பட மென்பொருள் சார்ந்த தயாரிப்புகளை வழங்குகின்ற,

அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆளின் விடயத்தில், அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆள், இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வரிக்குட்பட்டனவெனக் கருதப்பட்ட எவையேனும் வழங்குதல் களின் மீது வரிக்கு ஆளாதலாகாது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், ''ஐந்நூறு மில்லியன் ரூபாவுக்குக் குறைவாகவிராதிருந்தாலொழிய,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருநூற்றைம்பது மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக விராதிருந்தாலொழிய," என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவுக்கான முதலாவது காப்புவாசகத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது:-

''ஆயின், மேலும், ஏதேனும் வரிப்பணப்பட்டியல், இச்சட்டத்தின் 8ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட வரிக்குட்பட்டனவாகக் கருதப்பட்ட வழங்கல்களாகக் கொள்ளப்பட்ட வழங்கல்கள் மீது வழங்கப்படுதலாகாது.'.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவு, அப்பிரிவின் (11)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்து வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“(12) காப்புறுதித் தொழிலில் ஈடுபட்டுள்ளவரும், நீண்டகாலக் காப்புறுதித் தொழிலையும் பொதுக் காப்புறுதித் தொழிலையும் கொண்டு நடாத்துகின்றவரும், 2011 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க,காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டத்தின் 53ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக அத்தகைய நீண்டகாலக் காப்புறுதித் தொழிலையும் பொதுக் காப்புறுதித் தொழிலையும் இரு தனிவேறான கம்பெனிகளாகத் தனிவேறாக்குகின்றவருமான ஆளொருவரின் விடயத்தில், அத்தகைய தனிவேறாக்கல் தேதியன்றுள்ளவாறு பொதுக் காப்புறுதித் தொழில் தொடர்பாக உட்சேர்க்கப்படாத உள்ளீட்டு வரவுத்தொகையின் மீதி ஏதேனுமிருப்பின் அது, இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாடுகளுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆனால் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய வேறாக்கலின் பின்னர் பொதுக் காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற கம்பெனியினால் உட்சேர்க்கப்படாத உள்ளீட்டு வரவொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(13) விடயத்திற்கேற்ப, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் வங்கியின் அல்லது 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழிற் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பெனியின் கொள்ளுதல் அல்லது ஒன்றிணைவுத் தேதியன்றுள்ளவாறு அத்தகைய வங்கியின் அல்லது நிதிநிறுவனத்தின் வரிக்குட்பட்ட தொழில், அத்தகைய வங்கியின் அல்லது நிதிநிறுவனத்தின் ஏதேனும் உட்சேர்க்கப்படாத உள்ளீட்டு வரவு,இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையவும் இந்நோக்கத்துக்காக மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளுக்கிணங்கவும், உரிமை கோரப்படுவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவு, அதன் (4)ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:-

"(4) ஓராம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப் பினும், இவ்வத்தியாயம் ஏற்புடையதாகவுள்ள எவரேனு மாள் -

(அ) 2003, யூலை 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் மாதம் தொடர்பில் ஆனால் 2014, சனவரி 1ஆந் தேதிக்கு முன்னரான காலப்பகுதிக்கு அவர் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள வரியை (5)ஆம் உட்பிரிவின் ஏற்பாடு களுக்கமைய கணக்கிடுவதற்கான உட்கருத்தை எழுத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கலாம். எவ்வாறாயினும், (5)ஆம் உட்பிரி வின் ஏற்பாடுகள், ஆணையாளர் தலைமையதி பதிக்கு எழுத்தில் அறிவித்ததனை அடுத்துவரும் காலப்பகுதிக்கு ஏற்புடையற்பாலதாதல் வேண்டும்; அத்தகைய அறிவித்தல் இல்லாதொழிக்கப்படற் பாலதாதல் ஆகாது.

(ஆ) 2014,சனவரி 1ஆந் தேதியிலிருந்து தொடங்கும் ஏதேனும் காலத்துக்காக (5) ஆம் உட்பிரிவின் ஏற் பாடுகளுக்கு அமைந்தவராதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஈ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஈ என்னும் பிரிவு,"வரி வரவொன்று அனுமதிக்கப்பட வேண்டும்." என்னும் சொற்களுக் குப் பதிலாக, "2014, சனவரி 1ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு வரிவரவொன்று அனுமதிக்கப்பட வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 40ஆம் பிரிவு,அப்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (iii) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:-

"(iii) அசைவற்ற சொத்துக்கள் தொடர்பாக -

(அ) 2014, சனவரி 1ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற் பாலதான காலப்பகுதிக்கு, நான்குக்கு மேற்பட்ட வரிவிதிக்கப்படற்பாலனவான காலப்பகுதி களுக்கு வரியானது தவணை தவறுகையி லுள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதி பதியினால் தெரிவுசெய்யப்பட்ட நான்கு வரிவிதிக்கப்படற்பாலனவான காலப்பகுதிக ளுக்கு மட்டுமேயான வரியானது, அத்தகைய வரியின் தவணைதவறுகைத் தேதிக்கு முன்னர் பெறுமதிக்காக நல்லெண்ணத்துடன் உருவாக் கப்பட்ட ஏதேனும் சோந்தைக்கு அல்லது பாரபந்தத்திற்கு முன்னுரிமை வரிசைக் கிரமத்தைப் பெறுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) 2014, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு, ஐந்தாண்டுக் காலப்பகுதிக்குள்ளான வரி விதிக்கப்படற்பாலனவான காலப்பகுதிகளுக்கு மேற்பட்ட காலப்பகுதிகளுக்கான வரி தவணை தவறுகையிலுள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதியினால் தெரிவு செய்யப்பட வேண்டிய ஐந்தாண்டுக் காலப்பகுதிகளுக் குள்ளான வரிவிதிக்கப்படற்பாலனவான காலப்பகுதிகளுக்கு மட்டுமேயான வரியானது,

அத்தகைய வரியின் தவணை தவறுகைத் தேதிக்கு முன்னர் பெறுமதிக்காக நல்லெண்ணத்துடன் உருவாக்கப்பட்ட ஏதேனும் சோந்தைக்கு அல்லது பாரபந்தத்திற்கு முன்னுரிமை வரிசைக் கிரமத்தைப் பெறுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 71ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ii)ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:-

"(ii) 2ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவு குறிப்பீடு செய்யப்பட்ட பண்டங்களின் இறக்குமதியின்மீது, அந்த மாதத்தை உடனடுத்துவரும் மாதத்தினதும் அதற்கு பின்னர் ஒவ்வொரு மாதத்தினதும் பதினைந்தாம் நாளன்று அல்லது அதன் முன்னர், சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் சேகரிக்கப்பட்ட வரியின்,

(அ) 2014, சனவரி 1ஆந் தேதிக்கு முன்னரான காலப்பகுதிக்கு பத்து சதவீதம்;

(ஆ) 2014, சனவரி 1ஆந் தேதியிலிருந்து அல்லது பின்னரான ஏதேனும் காலப்பகுதிக்கு ஆறு சதவீதம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 83ஆம் பிரிவானது, "சர்வதேச கொண்டு செல்லல்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் அதன் (இ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(ஈ) வான் கொண்டுசெல்லல் என்ற வகையாக இலங்கையில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் இருந்து இலங்கையிலுள்ள வேறோர் சர்வதேச விமான நிலையத்திற்கு.".

**12.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாவது அட்டவணை யானது இத்தால் பின்வருமாறு அதன் பாகம் II இல் திருத்தப் படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணை யினைத் திருத்துதல்.

(1) அப்பாகத்தின் (அ) என்னும் பந்தியில்,-

(அ) (i) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலா கப் பின்வருவதனை இடுவதன் மூலம்:-

"கோதுமை, கோதுமை மா அல்லது பால்மா;";

(ஆ) (iii)ஆம் விடயத்தினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம்:-

"(iii) (சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசை வாக்கப்பட்ட வியாபாரப் பண்டங் களின் விவரணமும் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின் கீழ் இனங் காணப்பட்ட ஒப்பனைப் பொருட்கள் தவிர்ந்த) ஆயுள்வேத மருந்துப் பொருட்கள் அல்லது ஆயுள்வேத தயாரிப்புகள் (ஒப்பனைப் பொருட்கள் தவிர்ந்த) அல்லது யுனானி, சித்த அல்லது ஹோமியோபதி தயாரிப்பு கள் என்பவற்றிற்குரிய ஆயுள்வேதத் தயாரிப்புக்களும் ஆயுள்வேத ஆணை யாளரின் விதப்புரையுடனான அத்த கைய தயாரிப்புகளுக்கான மூலப் பொருட்களும்;";

(இ) (viii)ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம்:-

"(viii) 2014 சனவரி 1ஆந் திகதிக்கு முன்பதாக பகுதியளவில் இழுவைக் கலன்களாக வுள்ள கமத்தொழில் உழவு இயந்திரங் கள் அல்லது வீதி உழவு இயந்திரங் கள்;";

(ஈ) (xxii)ஆம் விடயத்தில், (vi) ஆம் உப விடயத் தினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரு வதனை இடுவதன் மூலமும்:-

"(vi) பவுசர்கள், மட்டூர்திகள், சரிவுத்தளப் பிரிப்பூர்திகள், மட்டுப்படுத்துமூர்திகள் அகழ்பொறிகள், தீயணைப்பு வாகனங் கள், சாக்கடை பவுசர்கள், வீதி உழவு இயந்திரங்களாகவுள்ள பகுதியளவி லான இழுவைக் கலன்கள் பொறித் தொகுதி, குப்பை கூழங்களை அகற்றும் செயற்பாடுகளுக்குப் பயன்படும் சாதனம்; அல்லது குப்பை கூழங்கள் ஏற்றும் ரக்கு வண்டிகள்;";

(உ) (vii) ஆம் விடயத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தினைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(viii) கழுத்துப்பட்டிகள் மற்றும் கழுத்துப் பட்டியின் அணிமுடிச்சு அல்லது வரைவுனர் பேனா;";

(ஊ) (xxiii) ஆம் விடயத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தினைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(xxiv) சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக் கப்பட்ட பண்டங்களின் விவரணம் மற்றும் வியாபாரப் பண்டங்கள் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்கள்

என்பவற்றின்கீழ் இனங்காணப்பட்ட விறைத்த தூண்டில், மீன்கொழுக்கி / கயிறு /நூலைச் சுற்றிவைக்கும் உருளை, மீன் இழுக்கும் கயிறு மற்றும் கடல்சார் உத்வேக என்ஜின்;".

(xxv) தொலைத்தொடர்புக் கைத்தொழிலுக் கான செப்புக் கேபிள்கள் இலங்கையில் இல்லாதவிடத்து இறக்குமதி செய்யப் படும் அத்தகைய செப்புக் கேபிள்கள் அல்லது-

தொலைத் தொடர்புக் கைத்தொழிலுக்கு என உள்ளூர் உற்பத்தியாளரிடம் இருந்து கொள்வனவு செய்யப் படும் அத்தகைய செப்புக் கேபிள்கள்."

(2) அப்பாகத்தின் (ஆ) என்னும் பந்தியில் -

(i) விடயம் (xiii) இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுவதன் மூலமும்:-

"(xiii) 2007ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின்கீழ் விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுக்கு அமைவாக இறக்குமதி செய்யப்பட்ட பதனிடப்படாத மரக்குற்றிகள், கப்பல் கள் பிரம்புகள் மற்றும் ஏதேனும் பொருட்கள், அத்தகைய பொருட்கள் விற்பனைக்கான ஏதேனும் சேர்ப்புகள் தவிர்ந்த ஏதேனும் பதனிடுதல் இல்லாத இறக்குமதியாளரால் விற்கப்படுகின்றது என்ற நிபந்தனைக்கு அமைவாக;";

(ii) விடயம் (xlvi) இனை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய விடயங்களை இடுவதன் மூலமும்:-

"(xlvii) பச்சை இலை, அரிசி, அரிசிமா, பாண், முட்டை, திரவப்பால் உட்பட தேங்காய்த் துருவல், இறப்பர், இறப்பர் பால், தேயிலை என்பன அவ்வுற்பத்திகள் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட அந்த அளவிற்கு;

(xlviii) தேயிலை அல்லது இறப்பர் கைத்தொழிலுக்கான பொறித்தொகுதி, சாதனங்கள், அல்லது கமத்தொழில் உழவு இயந்திரங்கள் அல்லது பகுதியளவிலான இழுவை வண்டிகளுக்கான வீதி உழவு இயந்திரங்கள் அத்தகைய உற்பத்திகள் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் அந்தளவிற்கு;

(xlix) 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் வருமானவரி நோக்கங்களுக்காக விலக்களிக்கப்பட்டவாறாக இலங்கையில் மீள இடவமைவு செய்யப்பட்ட சர்வதேச வலையமைப்பின் நிறுவனங்களின் ஏதேனும் தலைமையகங்கள் அல்லது பிராந்திய அலுவலகங்களினாலான சேவைகள் அத்தகைய பெறுகைகள் வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படும் அந்தளவிற்கு;

(L) ஆயுள்வேத மருந்தியல் அல்லது ஆயுள்வேத தயாரிப்புகளுக்கு உரிய உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஆயுள்வேத

தயாரிப்புகள் (ஒப்பனைப் பொருட்கள் தவிர்ந்த) அல்லது யுனானி, சித்த, ஹோமியோபதி தயாரிப்புகள் (ஒப்பனைப் பொருட்கள் தவிர்ந்த).".

(3) அப்பாகத்தின் (இ) என்னும் பந்தியின் (xvi)ஆம் விடயத்தின் "அடையாளங் காணப்பட்ட எந்திரத் தொகுதி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அடையாளம் காணப்பட்ட 2014 சனவரி 1ஆந் தேதிக்கு முந்திய எந்திரத் தொகுதி" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான பொதுவான திருத்தம்.

**13**. முதன்மைச் சட்டவாக்கத்தின் -

(அ) "ஆணையாளர்" என்னும் சொல் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் "சிரேட்ட ஆணையாளர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) "பிரதி ஆணையாளர்" என்னும் சொல் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் "ஆணையாளர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) "சிரேட்ட வரிமதிப்பீட்டாளர்" என்னும் சொல் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் "பிரதி ஆணையாளர் அல்லது சிரேட்ட பிரதி ஆணையாளர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஈ) "வரிமதிப்பீட்டாளர்" என்னும் சொல் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் "உதவி ஆணையாளர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

திருத்தப்படுகின்றது.

**14.** 2014ஆம் சனவரி 1ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றுரை எழுதப்பட்ட தேதியன்று முடிவடைகின்றதுமான ஏதேனும் காலப்பகுதியின் போது இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகச் சேர்பெறுமதி வரியைச் சேகரிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள எவரேனுமாள், உரிய அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வரிச் சேகரிப்பு செல்லுபடியானமுறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப் படுவதாகவும் கருதப்படுதலும் வேண்டும்: செல்லுபடி யாக்கல்.

ஆயின், மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள் அத்தகைய காலப்பகுதி யின் போது இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக ஏதேனும் சேகரிக்கப்பட்ட வரி தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட முடிபை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைப் பாதித்தலாகாது.

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்